
# நகர் ஊரமைப்புத்துறை

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கடலூர் மாவட்டம்
## உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்




| | | |
|---|---|---|
| மாவட்டம் | - | கடலூர் |
| வட்டம் | - | திட்டக்குடி |
| உள்ளாட்சி | - | மங்களூர் ஊராட்சி ஒன்றியம் |
| கிராமம் | - | ஆக்கனூர் |
| சர்வே எண் | - | **75/1,75/2B2,75/2B3,75/3A,75/6,75/7B,142/1** |
| இணையதள விண்ணப்பம் | - | **841TWGO2** |
| அளவு | - | 1 அங்குலம் 33 அடி (1:400) |
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | - | 1.19 1/2 ஏக்கர் / 4844.00 ச.மீ / 52140.38 ச.அடி |

<u>குறிப்பு:</u>-

| | | |
|---|---|---|
| கோரிய மனைகள் | - | 23 |
| ஒதுக்கிய மனைகள் | - | 22 |

<u>பொது உபயோக ஒதுக்கீடு:</u>

| | | |
|---|---|---|
| உள்ளாட்சிக்கு பரப்பு (A) | - | 55.00 ச.மீ / 409.03 ச.அடி (1.75%) |
| மின்சார துறை பரப்பு (B) | - | 38.53 ச.மீ / 247.57 ச.அடி (1.17%) |
| உத்தேச சாலைகள் | - | 1290.07 ச.மீ / 13886.31 ச.அடி |
| திரவிடம் 1 | - | 138.15 ச.மீ / 1487.03 ச.அடி |
| திரவிடம் 2 | - | 148.80 ச.மீ / 1601.66 ச.அடி |
| மனைப்பிரிவு எல்லை | - | |
| நிலையில் உள்ள சாலை | - | |
| கட்டிட வரம்பு | - | 7.2மீ மற்றும் 9.0மீ சாலைகளுக்கு - 1.50மீ |
| மூலை முடக்கு | - | 7.2மீ முதல் 12.0மீ வரை சாலைகளுக்கு - 1.50மீx1.50மீ |

## <u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1)நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1)நாள்.31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. அரசாணை எண்: 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020 மற்றும் அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.022-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகல் வசதி, மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியனவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத்துறையாலும் நிலஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊர்மைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போதும் இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு விடுதலின்றி நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
8. மனையிடத்தின் இடையே அமையும் குறைந்த அழுத்த மின்கம்பி பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்படல் வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனை:</u>

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்(கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல)விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

ம.வ / ந.ஊ.உ.இ. (க .மா) எண்: 12/2024

அளவையாளர்/உதவிவரைவாளர்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Cuddalore
Date:2024.02.06 19:1?:58

வரைவாளர்/நிலை-III

மேற்பார்வையாளர் வரைவாளர் நிலை-II

உறுப்பினர் செயலாலர்/உதவி இயக்குனர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கடலூர் மாவட்டம்.